முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பரமானந்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.10.2018, செவ்வாய்க்கிழமை

1. **தவகீர்த்தியே தருமத் தலைவனே**
**தவசியாகவே அகிலம் காத்திட**
**அவதாரம் புரிந்த அரங்கராசனே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குவலயத்தில் **விளம்பி தரிவை திங்கள்**
**தெரியவே மூவையோர் திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 16ம் நாள் 02.10.2018, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனுக்கு பரமானந்தர் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் திருவடியை
ஞானம் வேண்டி வரும் மக்களெல்லாம்
ஞாலமதில் வணங்கி ஆசி பெற

4. ஆசி பெற மக்களுக்குள் மாற்றமும்
ஆன்ம பலமும் சமத்துவ குணமும்
நேசக்கரம்பட தயாளகுணமுடன்
நிலவுலகோர் நடந்து தரும பலமுற

5. பலமுற ஞானிகள் ஆசி பெற்று
பலமுற தான தருமம் செய்து
வளமுற சமூக வளர்ச்சிக்கு
வள்ளல் தன்மை கூடிய சமத்துவ

6. சமத்துவ சமதர்ம தொண்டாக
சன்மார்க்க நெறிபட செய்து
நேமமுடன் அரங்கன் சீடர்களென
நிலவுலகே நிறைந்து பெரும் மாற்றம்

7. மாற்றம் இந்த கலியுகம் அடையும்
மண்ணுலகில் இருந்து வருகின்ற
தேற்றமிலா ஊழல் செயல்பாடுகள்
தெய்வீகம் மேல் பயமில்லா நடக்கும்

8. நடக்கும் வரிச்சுமை கொடுமை
நன்மை இல்லா நலத்திட்டங்கள்
இடர்கள் யாவும் இனி மாற்றம்
இணையிலா தொண்டர் படை மூலம்

9. மூலமதில் கண்டு தென்னகம்
முதல் சடுதி ஞான பூமியாக
வேலவன் அருளால் நடந்தேறும்
வினவிட குடிலில் சேவை ஆற்றும்

10. ஆற்றும் ஞானபலம் பெற்ற
அருட்சீடர்கள் அனைத்து பேரும்
ஏற்றமும் கடைத்தேற்றமும்
ஈதூழே அடைவது உறுதி

11. உறுதி கொண்டு எச்சூழலிலும்
ஓங்காரனை அகலாத் தொடர
மறுபிறவி என்பதிலா உலகோர்
மரணம் வென்று அழியாமை பெறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பரமானந்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லாது ஜென்மஜென்மமாய் தவங்களை தொடர்ந்து வெற்றி பெற்று பெரும்புகழ் பெற்ற தவகீர்த்திராசனே அளவிலாது தர்மமும் செய்து உலகின் தர்மத்தை காத்திட்ட தருமத்தின் தலைவனே, தாம் தவசியாக மகா யோகியாக இவ்வுலகினில் உள்ள துன்பங்களை நீக்கி மக்களை காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக அவதாரம் புரிந்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகினில் அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 16ம் நாள் 02.10.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பரமானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பரமானந்தர்.

மேன்மையும் உயர்வும்மிக்க அருட்திருவடிகளாம் அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை ஞானம் பெற வேண்டி வருகின்ற மக்களெல்லாம் பயபக்தியுடன் வணங்கி அரங்கனின் அருளாசிகளை பெற்றிட நலமாகுமப்பா.

ஞானம் வேண்டுகின்ற மக்களெல்லாம் அரங்கன் திருவடி பற்றி ஆசி பெற்றிட அவர்களுக்குள் அரங்கன் அருளால் நல்ல மாற்றங்கள் உண்டாகி ஆன்ம பலம் பெருகிடும். சாத்வீகமான சமத்துவ குணம் அதிகரிக்கும். நேசக்கரம் நீட்டி உலக உயிர்கள் பால், அன்பு செலுத்தி உலக உயிர்களிடத்து தயாள குணமுடன் நடந்து தருமபலம் பெற்று ஞானிகள் ஆசிகளையும் பெறுவார்கள்.

உலக மக்களே நீங்கள் ஞானபலமும் உடற்பலமும் பெற்று ஞானிகளின் ஆசிகளையும் பெற்றிட வேண்டுமாயின் அரங்கன் ஆற்றும் தானதருமப் பணிகளிலே தாராளமாய் பொருளுதவிகள் செய்து வளம் பெற்றிட நன்கு சமூக வளர்ச்சிக்கு பாடுபட்டு வள்ளல் தன்மையோடு கூடிய சமத்துவ சமதர்ம தொண்டுகளை சன்மார்க்க நெறி நின்று செய்து ஆறுமுக அரங்கனின் ஆசிகளைப் பெற்று ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அன்புச் சீடர்கள் என பெயர் பெற்று உயர்வடைந்து இப்பூவுலகம் முழுதும் அரங்கனின் சீடர்கள் பெருகிட பூவுலகமே அரங்கனின் சீடர்களால் நிறைந்து பெரும் மாற்றங்களை ஆறுமுக அரங்கன் தயவால், முருகப்பெருமானின் அருளாசியினால் அரங்கனின் சீடர்களால் நடத்தப்பட்டு இந்த கலியுகம் பெரும் மாற்றமடையுமப்பா.

இன்று இக்கலியுகத்தினில் நீதியின்றி நடக்கும் ஊழல் செயல்பாடுகள், தெய்வம் உண்டு என்பதையே நம்பாமல் தெய்வீக சக்தியின் மீது நம்பிக்கையில்லாமலும், பயம் இல்லாமலும் நடக்கின்ற பல அநீதி செயல்களும் மக்களை துன்பப்படுத்தக் கூடாது என்பதைக் கூட அறியாமல் கடவுளின் பிள்ளைகளான நாட்டு மக்களை வரிச்சுமை எனும் கொடுமையால் துன்புறுத்தியும் நாட்டு மக்களுக்கு நன்மை தராத திட்டங்களை நலத்திட்டங்கள் என்ற பெயரில் நடத்தி துன்புறுத்துவதும் என உள்ள அநீதி செயல்கள் யாவும் இனி வருங்காலங்களில் ஈடு இணையில்லா தொண்டர் படை மூலம் இனி மாற்றம் கண்டு தென்னகமாம் தமிழகத்திலிருந்து இந்தவித மாற்றங்கள் துவங்கி விரைந்து ஞானபூமியாக முருகப்பெருமானின் அருளால் நடந்தேறிடும்.

ஆறுமுக அரங்கன் அமைத்திட்ட ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினில் அரங்கனைச் சார்ந்து தொண்டுகள் செய்கின்ற ஞானபலம் பெற்றிட்ட அருட்சீடர்கள் அனைவரும் வாழ்வினில் பல முன்னேற்றங்களை அடைந்து ஜென்மத்தை இந்த பிறவியிலேயே கடைத்தேற்றும் வாய்ப்பைப் பெற்று உறுதியாக கடைத்தேறுவார்கள்.

ஓங்காரக்குடில் தொண்டர்களே சூழ்நிலைகள் கண்டு கலங்க வேண்டாம், சோர்வடைய வேண்டாம். நீங்கள் எல்லோரும் மனதில் உறுதி கொண்டு திடசித்த வைராக்கியத்துடன் தளராது செயல்பட்டு எந்த சூழலிலும் ஓங்காரனாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளை விட்டு அகலாது மானசீகமாக இறுகப் பற்றிக் கொண்டு அகலாது பின்தொடர்ந்து வர வேண்டும். அரங்கனை விட்டு அகலாது தொடர்ந்து வந்தால் மறுபிறவி என்பது இல்லாத பிறப்பு இறப்பற்ற நிலையாம் மரணம் வென்ற மரணமிலாப் பெருவாழ்வு எனும் பேரின்ப நிலையை பெற்று சித்தி பெறலாம் என உபதேசிக்கிறார் மகான் பரமானந்தர் தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகோர் அறிய.

–சுபம்–